KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# முதல்வர் விஜய் வர வேண்டாம்: கர்நாடக முதல்வர் வேண்டுகோள்

**பெங்களூரு, ஜூலை 31:** காவிரி விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்த பெங்களூருக்கு ஆக. 3–ஆம் தேதி வருவதாக திட்டமிட்டிருந்த தமிழக முதல்வர் ஜோசப் விஜய், தனது வருகையை மற்றொரு நாளுக்கு தள்ளிவைக்க வேண்டும் என கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் வேண்டுகோள் விடுத்தார்.





காவிரி விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமாரை பெங்களூரில் ஆக. 3–ஆம் தேதி சந்திக்க தமிழக முதல்வர் விஜய் திட்டமிட்டிருந்தார். இதற்கான ஏற்பாடுகளை கர்நாடக அரசு செய்திருந்தது.

இந்நிலையில், பெங்களூரில் முதல்வர் டி.கே. சிவகுமார் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது: காவிரி விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் விஜய், என்னைச் சந்தித்துப் பேசுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தோம். ஆனால், தற்போது சூழல் சாதகமாக இல்லாததால், அவரது வருகையை தள்ளிவைக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன். இருவரின் சந்திப்பை மேலும் சுமுகமான, அமைதியான சூழலில் நடத்தலாம்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக முதல்வர் விஜய் என்னுடன் தொலைபேசியில் ஏற்கெனவே பேசியுள்ளார். தற்போது அவரை அழைத்து ஆக. 3 ஆம் தேதிக்குப் பதிலாக வேறொரு தேதியில் சந்திப்போம் என்று கேட்டுக்கொள்வேன். இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே இருவரின் சந்திப்பும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

காவிரி நதியின் குறுக்கே கட்ட திட்டமிட்டிருக்கும் மேக்கேதாட்டு அணை திட்டம், கர்நாடகத்தைக் காட்டிலும் தமிழகத்துக்கு கூடுதல் நன்மையை அளிக்கும். இந்தத் திட்டத்தால் கர்நாடகம் அடையும் நேரடி பயன், நீர் மின்சாரத்தின் மூலம் தயாரிக்கப்படும் 400 மெகாவாட் மின்சாரம் மட்டுமே.

மேக்கேதாட்டு அணையானது சமன்பாட்டு அணை என்பதால், இதில் சேகரிக்கப்படும் 66 டிஎம்சி தண்ணீரை நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்த முடியாது. அந்த அணையில் சேமிக்கப்படும் தண்ணீரை நீர்ப்பாசனத்துக்கு பயன்படுத்தும் அதிகாரம் கர்நாடகத்துக்கு இல்லை.

காவிரி நதியில் இருந்து தமிழகத்துக்கு வழங்க வேண்டிய 177.25 டிஎம்சி தண்ணீரை தருவது மட்டுமல்லாது, ஆற்றின் குறுக்கே மேக்கேதாட்டு அணை கட்டுவதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. அண்மையில் உச்சநீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பிலும் இந்த உத்தரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், காவிரியின் குறுக்கே தனது எல்லைக்குள் மேக்கேதாட்டு அணையை கர்நாடகம் கட்டிக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேக்கேதாட்டு அணைக்கான விரிவான திட்ட விவர அறிக்கையை மத்திய அரசு நிராகரிக்கவில்லை. மாறாக, சில விளக்கங்களைக் கேட்டுள்ளது. அவற்றை கர்நாடகம் தாக்கல் செய்யும்.

இந்த விவகாரத்தில் சட்ட ரீதியான வாய்ப்புகளை கர்நாடகம் தொடர்ந்து பரிசீலிக்கும். தங்கள் மாநில நலனைக் காக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு உள்ளது. தமிழகத்தின் நலனையும் காக்க வேண்டும் என்பதுதான் கர்நாடகத்தின் விருப்பம்.

ஆனால், எதிர்பார்த்த மழை பெய்யாததால், கர்நாடகம் எதிர்கொண்டிருக்கும் நிலைமையை தமிழகத்துக்கு விளக்க வேண்டிய கடமை நமக்குள்ளது. அந்தத் திசையை நோக்கி இரு மாநில அரசுகளும் தொடர்ந்து செயல்படும். ஆக. 2–ஆம் தேதி நடக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்குப் பிறகு நிலைமை சீரடையும்போது, இருதரப்பின் வசதிக்கேற்ப பேச்சுவார்த்தை நடத்த கர்நாடகத்துக்கு வருமாறு தமிழக முதல்வர் விஜய்க்கு அழைப்பு விடுப்பேன் என்றார்.

# வருவாயைப் பெருக்குவதற்கான சிறப்புக் குழுவின் முதல் கூட்டம்

**சென்னை, ஜூலை 31:** தமிழக அரசின் வருவாயைப் பெருக்க பொருளாதார நிபுணர் மான்டேக் சிங் அலுவாலியா தலைமையில் உருவாக்கப்பட்ட சிறப்புக் குழுவின் முதல் கூட்டம் காணொலி மூலம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், அரசுக்கு வருவாய் பெருக்கும் அனைத்துத் தரப்பு பங்களிப்பாளர்களை சந்தித்தும், மின்னஞ்சல் வழியாக கருத்துகளைப் பெறவும் முடிவெடுக்கப்பட்டது.

கூட்டத்தில், குழுவின் பணிக் குறிப்பாணைகள் குறித்தும், தனது பணியை முன்னெடுத்துச் செல்லும் முறை குறித்தும் குழு கலந்துரையாடியது.

நிதித்துறையின்வரிக்கொள்கை ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் நிதித் தரவு பகுப்பாய்வுப் பிரிவு ஆகிய வற்றிலிருந்து அமைக்கப்படும் தனி ஆராய்ச்சிக் குழுவின் ஒத்துழைப்புடன் இந்தக் குழு செயல்படும்.

பிற மாநிலங்களின் அனுபவங்களையும், பொது நிதி மேலாண்மையில் நீடித்திருக்கக்கூடிய நடைமுறைகளையும் இக்குழு பயன்படுத்துக் கொள்ளும்.

குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளாகத் தனது பரிந்துரைகளை குழு வகுக்கும்.

நிகழாண்டு ஆகஸ்டில் நேரடிக் கூட்டத்தைத் தொடங்கி, தனது கலந்தாய்வு பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

மேலும், இக்குழுவின் பரிந்துரைகள் சமநிலையான மற்றும் விரிவான மதிப்பீட்டைப் பிரதிபலிக்கும் வகையில், பணியின் போது அனைத்துத் தரப்பு பங்களிப்பாளர்களைச் சந்தித்தும், மின்னஞ்சல் வழியாக கருத்துகளை வரவேற்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# தமிழகத்தில் 4.68 லட்சம் பேருக்கு நாய்க்கடி; ரேபிஸ் பாதிப்பால் 24 பேர் உயிரிழப்பு

**சென்னை, ஜூலை 31:** தமிழகத்தில் நிகழாண்டில் 4.68 லட்சம் பேர் நாய்க் கடிக்குள்ளாகியிருப்பதாகவும், அதில் 24 பேர் ரேபிஸ் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாகவும் பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

தெரு நாய்கள், வளர்ப்பு பிராணிகள் கடித்து காயமடையும் சம்பவங்கள் தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. பொதுவாகவே, ரேபிஸ் தொற்றிலிருந்து செல்லப் பிராணிகளையும், மனிதர்களையும் காப்பதற்கு ஒரே வழி தடுப்பூசி மட்டும்தான்.

நாய்களைப் பொருத்தவரை பிறந்த முதல் ஆண்டில் இரு முறை ரேபிஸ் தடுப்பூசி செலுத்த வேண்டும். அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஒரு முறை அத் தடுப்பூசியை வழங்க வேண்டியது அவசியம்.

ஆனால், தெரு நாய்களுக்கும், சில இடங்களில் செல்லப் பிராணிகளுக்கும் அத்தகைய தடுப்பூசி முறையாக செலுத்தப்படுவதில்லை. இதனால், மனிதர்களை அவை கடிக்கும்போது ரேபிஸ் தொற்று பரவி இரு தரப்புக்குமே பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அந்த வகையில் கடந்த ஆண்டில் மட்டும் மாநிலம் முழுவதும் 6,25,700 பேர் நாய்க்கடிக்கு உள்ளாகினர். 34 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் நிகழாண்டு ஜனவரி 1 முதல் தற்போது வரையிலான காலகட்டத்தில் 4.68 லட்சம் பேர் நாய்க் கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

அதிகபட்சமாக, சேலத்தில், 28,166 பேர் பாதிக்கப்பட்டனர். கடலூரில் 22,113 பேரும், திருநெல்வேலியில் 23,095 பேரும், சென்னையில் 9,229 பேரும் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர்களில் உரிய நேரத்தில் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமல், காலதாமதமாக மருத்துவமனையை நாடியதால் 24 பேர் ரேபிஸ் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்தனர்.

கடந்த சில ஆண்டுகளின் தரவுகளை ஆய்வு செய்தால் நாய்க் கடி மற்றும் ரேபிஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 60 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆண்கள் என்பது தெரியவருகிறது.

31 முதல் 50 வயதிலான இளம் மற்றும் நடுத்தர வயதினரே இந்த பாதிப்பை அதிகமாக எதிர்கொள்கின்றனர். அதற்கு அடுத்தபடியாக 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் நாய்க் கடிக்குள்ளாவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் ஆண்டுதோறும் நாய்க்கடியால் லட்சக்கணக்கானோர் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவருக்கும் ரேபிஸ் தொற்று ஏற்படுவதில்லை.

ஆனால், அத்தகைய வைரஸால் பாதிக்கப்பட்ட நாய், ஆடு, மாடு, குதிரை, குரங்கு, பூனை, நரி, கீரி, ஓநாய், வெளவால் உள்ளிட்ட விலங்கினங்கள் கடிக்கும்போது ரேபிஸ் தொற்று நேரிடுகிறது.

தமிழகத்தில் நிகழாண்டில் 24 பேர் ரேபிஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள மருத்துவமனைகள், சுகாதார நிலையங்களில் போதிய ரேபிஸ் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன.

தெரு நாய்கள் அல்லது செல்லப் பிராணி கடித்தவர்களுக்கு நான்கு தவணை ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. முதல் நாள், மூன்றாவது நாள், ஏழாவது நாள் மற்றும் 28-ஆவது நாளில் தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆழமான காயமாக இருந்தால் அந்த இடத்தில் இம்யூனோகுளோபிலின் தடுப்பூசி கூடுதலாக செலுத்தப்படுகிறது. அந்த வகையில் பல்லாயிரக்கணக்கானோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு உயிர் காக்கப்பட்டுள்ளது. விழிப்புணர்வு இன்றி சிகிச்சை பெறாமல் இருக்கும்போதுதான் உயிரிழப்பு ஏற்படுகிறது என்றனர்.

# இளைஞர்களிடையே அதிகரிக்கும் பால்வினைத் தொற்று

**சென்னை, ஜூலை 31:** இளைஞர்களிடையே அண்மைக்காலமாக பால்வினைத் தொற்றுகள் பரவுவது 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தகைய பாதிப்புகளுடன் தோல் மற்றும் பொது மருத்துவர்களை நாடுவோரின் எண்ணிக்கை உயர்ந்து வருவதாகவும், உரிய விழிப்புணர்வு இல்லாததே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கர்நாடகத்தில் 7,000 கல்லூரி மாணவர்களுக்கு 'ஹெச்ஐவி' உறுதி செய்யப்பட்டதாக அண்மையில் செய்திகள் வெளியாகின. ஆனால், அது முற்றிலும் தவறான செய்தி என அந்த மாநில அரசு திட்டவட்டமாகத் தெரிவித்தது. வதந்திகளைப் பரப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

'ஹெச்ஐவி' பாதிப்பு அதிகரிக்கவில்லை எனக் கூறினாலும், பால்வினைத் தொற்றுகள் பரவலாகக் காணப்படுவதாக சுகாதார ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இதை உறுதிபடுத்தும் வகையில், தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே அதன் தாக்கம் தீவிரமாக இருப்பதைக் காண முடிவதாக மருத்துவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இது குறித்து முதுநிலை தோல் மருத்துவ சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.முருகசுந்தரம் கூறியதாவது:

சமூகத்தில் பெரும்பாலானோருக்கு மன அழுத்தம், உளவியல் தாக்கங்கள் அதிகரித்துவிட்டன. அதன் நீட்சியாக இல்லற வாழ்க்கையில் மன மகிழ்ச்சி குன்றிவிட்டது. இதனால், திருமணத்தைக் கடந்த முறையற்ற உறவுகள் காணப்படுகின்றன.

மற்றொருபுறம், திருமணமே செய்து கொள்ளாமல் பலருடன் இணைந்து வாழக் கூடிய கலாசாரம் இளைஞர்களிடையே அதிகரித்துவிட்டது. இந்த

## எச்சரிக்கும் மருத்துவர்கள்

இரண்டையுமே பண்பாட்டுச் சூழலுடனோ, நெறிகளுடனோ நாங்கள் ஒப்பிடவில்லை. மாறாக, மருத்துவ ரீதியாக அணுகினால் பால்வினை நோய்களுக்கு அந்த வாழ்க்கைமுறையே பிரதான காரணமாக உள்ளது.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் இருப்பவர்கள் பலர் வார இறுதி நாள்களில் விருந்துகளுக்குச் செல்வதாகவும், அப்போது பாதுகாப்பற்ற முறையில் நண்பர்களுடனும், தோழிகளுடனும் உறவில் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு என்னிடம் பல இளைஞர்களும், இளம் பெண்களும் சிகிச்சைக்கு வருகின்றனர். அவர்களில் பலருக்கு 'ஹெர்பிஸ்' போன்ற பால்வினைத் தொற்றுகள் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பாதுகாப்பில்லாமலும், அதிக இணையர்களுடனும் உறவில் இருந்தால் தொடர்ச்சியாக இத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்ற புரிதல் அவர்களுக்கு இல்லை.

மேற்கத்திய நாடுகளில் பால்வினை நோய்கள் 60 சதவீதம் பேருக்கு ஏற்படக் கூடிய பொதுவான பிரச்னை. இந்தியாவில் அத்தகைய சூழல் இல்லாமல் இருந்தது. தற்போது அந்த நிலையை நோக்கி நாம் நகர்ந்து வருகிறோம். விழிப்புணர்வும், பாதுகாப்பும் மட்டுமே தொற்று பரவலைத் தடுக்கும் என்றார்.

## தீவிர விழிப்புணர்வு பிரசாரம்: தமிழக அரசு திட்டம்

தமிழகத்தில் 'ஹெச்ஐவி' பாதிப்பு குறித்து தீவிர விழிப்புணர்வு பிரசார திட்டத்தை இரு மாதங்களுக்கு முன்னெடுக்க உள்ளதாக மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்ட இயக்குநர் சீதாலட்சுமி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

தமிழகத்தில் 'ஹெச்ஜவி' பாதிப்பு தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. மாநில மக்கள் தொகையில் 0.16 சதவீதம் பேருக்குத்தான் தற்போது அந்த தொற்றுள்ளது. வரும் காலங்களில், இதை முழுமையாக வேரறுக்க அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறோம்.

கல்லூரிகளில் செஞ்சுருள் சங்கங்களைத் தொடங்கி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். அதன் தொடர்ச்சியாக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் 12 முதல் அக்டோபர் 12 வரை விரிவான விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொள்ள இருக்கிறோம்.

பள்ளி, கல்லூரிகள், பொது இடங்கள், போக்குவரத்து வாகனங்கள் என அனைத்து இடங்களிலும் எய்ட்ஸ் தொடர்பான புரிதல் ஏற்படுத்தப்படும். சமூக வலைதளங்கள், வாட்ஸ் ஆப் குறுஞ்செய்திகள் மூலமாகவும் பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

'பிரேக்ஃப்ரீ' இந்தியா என்ற செயலி பயன்பாட்டில் உள்ளது. அதன் மூலம் பால்வினை பாதிப்புகள் குறித்து சுய பரிசோதனை மதிப்பீடு செய்து கொள்ளலாம். அந்த தகவலையும் மக்களிடையே பரவலாக கொண்டு செல்ல உள்ளோம் என்றார்.

இந்தியாவில் படிக்காதவர்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம் மிகக் குறைவாக இருக்கும் நிலையில் (3%), கல்வித் தகுதி உயர உயர வேலைவாய்ப்பின்மை விகிதமும் (40%) அதிகரிக்கிறது. பிஹெச்டி முடித்தவர்கள் முற்றிலும் வேலை இல்லாமல் இருப்பதைவிட, தங்களின் தகுதிக்கு மிகக் குறை வான ஊதியம் மற்றும் பதவிகளில் பணியாற்றுவதே நாட்டில் இப்போது மிகப் பெரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

அரசுத் துறைகளில் அலுவலக உதவியாளர் அல்லது எழுத்தர் போன்ற 4-ஆம் நிலை பணிகளுக்கு அறிவிப்பு வெளியாகும் போது ஆயிரக்கணக்கான பிஹெச்டி பட்டதாரிகள் அதற்கு விண்ணப்பிக்கும் அவல நிலையும் நீடிக்கிறது. பல பிஹெச்டி பட்டதாரிகள் தங்களின் முனைவர் பட்ட காலத்தின்போது வாங்கிய உதவித் தொகையைவிட, மிகக் குறைந்த ஊதியத்தில் கல்லூரிகளில் தற்காலிக விரிவுரையாளர்களாகப் பணிபுரியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளில் தகுந்த உள்கட்டமைப்பு இல்லாத கல்லூரிகளிலும் பிஹெச்டி சேர்க்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. அதனால், பிஹெச்டி முடித்தவர்கள் அதை ஒரு பட்டமாக வைத்துக்கொள்ளும் அளவிலேயே உள்ளது. தரமற்ற நிலையில் பட்டங்கள் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதில்லை என்பதில் வியப்பில்லை. முனைவர் பட்டம் பெற்ற பலர் அதற்கான தகுதியற்றவர்களாக இருப்பதையும் பார்க்க முடிகிறது.

அண்மையில் கர்நாடக மாநிலத்தில் போலி பிஹெச்டி சான்றிதழை அளித்து பணியில் சேர்ந்த 249 கௌரவ விரிவுரையாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யவும், எதிர்காலத்தில் பணித் தேர்வில் இவர்கள் பங்கேற்க நிரந்தரத் தடை விதித்தும் அந்த மாநில கல்லூரி கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகள் பல நூறு கோடி ரூபாயை கல்வித் துறைக்கு ஒதுக்கி உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தி, பாடத்திட்டங்களை வகுத்துச் செயல்படுகின்றன. அதில், பலதரப்பட்ட மாணவர்களும் இணைந்து தங்கள் குடும்பச் சூழல், பொருளாதாரச் சூழல்களைக் கடந்து பயின்று பட்டம் பெற்று வேலைக்காக காத்திருக்கும் நிலையில், போலி பிஹெச்டி பட்டத்தை இடைத்தரகர்களிடம் பெற்று அரசு கல்வி நிறுவனங்களை ஏமாற்றியிருக்கும் போலி பட்டதாரிகளை என்னவென்று சொல்வது?

முனைவர் பட்ட ஆய்வில் அதிக அளவில் மாணவர்கள் இணைவதாலேயே, உயர் கல்வியின் தரம் அதிகரிக்கும் என்றோ, கல்வி மேம்படுகிறது என்றோ நாம் கருத முடியாது. அதிக அளவில் ஆராய்ச்சி மாணவர்களின் சேர்க்கை புதிய கண்டுபிடிப்புகள், ஆய்வு முன்னெடுப்புகள் (இன்னோவேஷன்), அறிவாற்றல் அதிகரிப்பு (இன்டெலெக்சுவல் புரோக்ரஸ்) ஆகியவற்றின் மேம்பாடு என்றும் கூறிவிட முடியாது. ஆய்வு மாணவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படுகிறதா?, முனைப்புடன் ஆய்வில் ஈடுபடுகிறார்களா? என்பதைப் பொருத்துத்தான் உயர் கல்வியின் தரத்தை மதிப்பிட முடியும்.

உயர் கல்வி என்பது புதிய ஆராய்ச்சிகளுக்கும், வேலை வாய்ப்புகளுக்கும் வழிகோலுவதாக அமைவது அவசியம். அதில் போலிகள் தலையீடும் இணையுமானால், இந்தியாவில் முனைவர் பட்டங்கள் சர்வதேச அளவில் கேலிக்கூத்தாகும். இந்த நிலைமை தொடரலாகாது!


Academy

FS and TNPSC Exams

i Park, Coimbatore - 641 001

# பிறப்பு, இறப்பு பதிவு மசோதா மக்களவையில் நிறைவேற்றம்

## அமளிக்கு இடையே விவாதமின்றி ஒப்புதல்

**புது தில்லி, ஜூலை 31:** மக்களவையில் எதிர்க்கட்சிகளின் அமளிக்கு இடையே எந்த விவாதமும் நடத்தப்படாமல் பிறப்பு, இறப்பு பதிவு சட்டத்திருத்த மசோதா வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த மசோதாவை விவாதமின்றி நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது துரதிருஷ்டவசமானது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

மக்களவை வெள்ளிக்கிழமை கூடியதும், தில்லியில் மாணவர்கள் மீதான காவல் துறையின் தாக்குதல் உள்பட பல்வேறு விவகாரங்களை எழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

அப்போது, எதிர்க்கட்சிகளின் செயல்பாடு குறித்து அதிருப்தி தெரிவித்த அவைத் தலைவர் ஓம் பிர்லா, அவை அலுவல்களுக்கு திட்டமிட்டு இடையூறு ஏற்படுத்துவதாக சாடினார்.

மேலும், பெண் எம்.பி.க்கள் குறித்து அவையில் அநாகரிகமாகப் பேசியதாக நடப்பு மழைக்கால கூட்டத் தொடரில் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. கல்யாண் பானர்ஜி, அக்கட்சியில் இருந்து தனி அணியாகப் பிரிந்த 20 அதிருப்தி எம்.பி.க்களின் புகைப்படங்களை கழுத்தில் தொங்கவிட்டபடி நாடாளுமன்ற வளாகத்தில் சுற்றுவது குறித்தும் அவைத் தலைவர் ஓம் பிர்லா அதிருப்தி வெளியிட்டார். கல்யாண் பானர்ஜியின் செயல் அவை கண்ணியத்தைக் குறைப்பதாக அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் அமளியால் அவை அலுவல்கள் மதியம் 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பாஜக எம்.பி. திலீப் சைகியா தலைமையில் அவை மீண்டும் கூடியபோது, பிறப்பு, இறப்பு பதிவு சட்டத்திருத்த மசோதா பரிசீலனை மற்றும் நிறைவேற்றத்துக்காக கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், 'மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா எங்கே?' என கோஷமிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள், விவாதத்தில் பங்கேற்க மறுத்துவிட்டனர். இதனால், எந்த விவாதமும் நடத்தப்படாமல், குரல் வாக்கெடுப்பு நடத்தி மசோதா நிறைவேற்றப்பட்டது.



மக்களவையில் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு.

### மாநிலங்களவை ஒத்திவைப்பு

மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை காலை கூடியதும், விதி எண் 267-இன்கீழ் விவாதம் கோரி எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நோட்டீஸ்கள் நிராகரிக்கப்படுவதாக அவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். இதையடுத்து, பல்வேறு விவகாரங்களை எழுப்பி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அவர்களை விமர்சித்த மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் செளஹான், எதிர்க்கட்சிகள் மலிவான அரசியலில் ஈடுபடுவதாகவும், அவையின் மாண்புடன் விளையாடுவதாகவும் கூறினார். சிறிது நேரத்திலேயே அவை அலுவல்கள் திங்கள்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டன.

'முக்கியத்துவம் வாய்ந்த மசோதா மீது விவாதம் நடத்த அரசு விரும்பியது; ஆனால், எதிர்க்கட்சிகள் மறுத்துவிட்டன. இது துரதிருஷ்டவசமானது. தயவு செய்து எதிர்காலத்தில் இதுபோல் நடந்துகொள்ள வேண்டாம். இல்லையெனில், உங்களைத் தேர்ந்தெடுத்து, நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்கள் கேள்வி கேட்பர்' என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார். மசோதா நிறைவேற்றத்தைத் தொடர்ந்து, அவை அலுவல்கள் திங்கள்கிழமைக்கு (ஆக.3) ஒத்திவைக்கப்பட்டன.

**அம்சங்கள் என்னென்ன?:** நாட்டில் பிறப்பு, இறப்பு பதிவை உரிய நேரத்துக்குள் மேற்கொள்ள மக்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த 1969-ஆம் ஆண்டின் பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள புதிய மசோதா வழிவகுக்கிறது.

தற்போதுள்ள சட்டத்தின்படி, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயம் என்பதுடன் ஓராண்டுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக நடுவரிடமிருந்து உத்தரவு பெறுவது அவசியம். புதிய மசோதாவின்படி, இந்தப் பிரிவு 2 ஆண்டுகள் வரையிலான தாமதத்துக்கு தொடர்ந்து பொருந்தும். 2 ஆண்டுகளுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், முதல்நிலை குற்றவியல் மாஜிஸ்திரேட் பிறப்பிக்கும் உத்தரவின் அடிப்படையில் மட்டுமே பதிவு மேற்கொள்ளப்படும்.

**இடையூறுகளால் வீணாகும் கேள்வி நேரம்:** நடப்பு மழைக் கால கூட்டத் தொடரில் இரண்டாவது வாரமாக வெள்ளிக்கிழமையும் இடையூறுகளால் கேள்வி நேரம் முழுமையாக நடைபெறவில்லை.

மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை 20-ஆம் தேதி தொடங்கிய நிலையில், பல்வேறு விவகாரங்களால் எதிர்க்கட்சிகளின் அமளி தொடர்கிறது. அவையில் காலை 11 மணி முதல் மதியம் 12 மணி வரை கேள்வி நேரம் நடைபெறும். கடந்த 2 வாரங்களில் கேள்வி நேரம், 10 நிமிஷங்களுக்கு மேல் நடைபெறவில்லை. கேள்வி நேரத்தில் மத்திய அரசை எதிர்க்கட்சிகள் பொறுப்புக் கூற செய்ய முடியும் என்பதால் இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்று அவைத் தலைவர் ஓம் பிர்லா தொடர்ந்து விடுத்துவரும் வேண்டுகோள்களுக்கு பலன் கிடைக்கவில்லை.

**அமளிக்கு இடையே நிறைவேறும் மசோதாக்கள்...:** நடப்பு மழைக்கால கூட்டத் தொடரில், நீட் வினாத்தாள் கசிவு, மாணவர்கள் போராட்டம் உள்ளிட்ட விவகாரங்களால் எதிர்க்கட்சிகளின் அமளி நீடித்து வருகிறது. அமளிக்கு இடையே பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதா, தேசிய கௌரவம் மீதான அவமதிப்புகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதா ஆகியவை நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, பிறப்பு, இறப்பு பதிவு சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியுள்ளது.

### கால அவகாசம் நீட்டிப்பு

பிரதமர், முதல்வர்கள், மத்திய அல்லது மாநில அமைச்சர்கள் தீவிர குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு 30 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டால், அவர்களைப் பதவிநீக்க வழிவகுக்கும் 130-ஆவது அரசமைப்பு திருத்தச் சட்ட மசோதா-2025ஐ பாஜக எம்.பி. அபராஜிதா சாரங்கி தலைமையிலான நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆராய்ந்து வருகிறது.

இக்குழு அறிக்கை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம், எதிர்வரும் குளிர்கால கூட்டத் தொடரின் கடைசி வாரத்தின் முதல் நாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானம் மக்களவையில் வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழிகாட்டு மையங்கள்

## என்எம்சி உத்தரவு

**சென்னை, ஜூலை 31:** அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான வசதிகளையும், உதவிகளையும் வழங்குவதற்கான சிறப்பு வழிகாட்டு மையங்களை அமைக்குமாறு தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கு என்எம்சி செயலர் டாக்டர் ராகவ் லங்கர் அனுப்பியுள்ள சுற்றறிக்கை: மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-இன்படி அனைத்துக் கல்வி நிறுவனங்களும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குத் தடையற்ற கற்றல் சூழலையும், தேவையான சிறப்பு வசதிகளையும் செய்து தர வேண்டியது கட்டாயம்.

அந்த வகையில், அவர்களுக்கான வழிகாட்டு மையத்தை ஒவ்வொரு கல்லூரியிலும் அமைப்பது அவசியமாகிறது. உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், தேசிய மருத்துவ ஆணையம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரிகளில் அமைக்கப்படும் இந்த வழிகாட்டு மையங்கள், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஒற்றைச் சாளர உதவி மையமாகச் செயல்படும். அதாவது, மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த மருத்துவமனைகளுக்கு மாணவர்கள் எளிதாக சென்று வரத் தேவையான வசதிகளை அந்த மையம் மூலம் செய்துதர வேண்டும்.

அதனுடன், படிப்பு காலம் மற்றும் மருத்துவப் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளையும் அதன் வாயிலாக வழங்குதல் அவசியம். சம்பந்தப்பட்ட மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாற்றுத்திறன் மதிப்பீட்டு வாரியம், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மருத்துவமனை நிர்வாகத்துடன் இணைந்து செயல்படும் பொறுப்பும் இந்த மையத்துக்கு உள்ளது.

சேர்க்கையின்போதே இந்த மையத்தின் தொடர்பு எண்களை மாணவர்களுக்கு வழங்குவதுடன், இணையதளம் மற்றும் அறிவிப்புப் பலகைகளிலும் அதுகுறித்த விவரங்களை வெளிப்படையாகக் காட்சிப்படுத்த வேண்டும். மாணவர்களிடம் இருந்து பெறப்படும் கோரிக்கைகள், புகார்களை ரகசியமாகவும், பாகுபாடின்றியும் பராமரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

S Academy
PS, IFS and TNPSC Exams
Gandhi Park, Coimbatore - 641 001

# ரூ.84,084 கோடியில் தேசிய கடல்சார் எரிசக்தி ஆய்வு-உற்பத்தி திட்டம்

**புது தில்லி, ஜூலை 31:** ரூ.84,084 கோடி மதிப்பீட்டிலான தேசிய கடல்சார் எரிசக்தி ஆய்வு-உற்பத்தி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை வெள்ளிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

சமுத்திர மந்தன் எனும் இந்தத் திட்டம், கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியின் சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்டது.

ஆழ்கடல் பகுதிகளில் கச்சா எண்ணெய்-எரிவாயு வளங்களைக் கண்டறிதல், எரிசக்தி கிணறுகள் அமைக்கும் ஆய்வுக்காக துளையிடுதல், கண்டறியப்படும் எரிசக்தி வளங்களில் இருந்து உற்பத்திக்கு தேவையான பொது உள்கட்டமைப்புகளை நிறுவுதல் ஆகிய முக்கிய செயல்பாடுகளை உள்ளடக்கிய திட்டமாகும்.

தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் 'சமுத்திர மந்தன்' எனப்படும் தேசிய கடல்சார் ஆய்வு-உற்பத்தி திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மத்திய அரசின் முழுப் பங்களிப்புடன் கூடிய இத்திட்டத்துக்கு 2030-31-ஆம் நிதியாண்டு வரை 5 ஆண்டு காலகட்டத்துக்கு ரூ.84,084 கோடி நிதி ஒதுக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், உள்நாட்டில் எண்ணெய் வளங்களின் ஆய்வு, உற்பத்தியை விரைவுபடுத்துதல், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி முன்னேறுதல் ஆகியவற்றில் இத்திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாக அமையும்.

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

கடல்சார் எரிசக்தி ஆய்வின் அனைத்து நிலைகளிலும் விரிவான அம்சங்களை உள்ளடக்கிய இத்திட்டம், மிகுந்த ஆழ்கடல் மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் ஆய்வுக்காக துளையிடப்படும் ஒவ்வொரு கிணறுக்கும் தலா ரூ.650 கோடி வரையிலான நிதி ஆதரவை வழங்கும்.

**பணிவாரியான நிதி ஒதுக்கீடு:** மொத்த ஒதுக்கீட்டில் பாதிக்கும் மேற்பட்ட தொகை அதாவது ரூ.43,200 கோடி வரை ஆழ்கடல் துளையிடுதல் பணிக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இது செலவும், குறிப்பிடத்தக்க புவிசார் அபாயங்களும் நிறைந்த பணியாகும். கண்டறியப்படும் எரிசக்தி வளங்களில் இருந்து உற்பத்திக்கு தேவையான பொது உள்கட்டமைப்புகளை உருவாக்க ரூ.10,000 கோடி ஒதுக்கப்படும். கடல்சார் தரவுகளை ஈட்டுவதற்கு ரூ.28,534 கோடியும், எண்ணெய்-எரிவாயு உற்பத்தி, சேவை மண்டலங்களை அமைக்க ரூ.2,000 கோடியும் ஒதுக்கப்படும்.

டிஜிட்டல் திட்ட மேலாண்மை, திறன் மேம்பாடு, நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு, சர்வதேச அளவிலான தொடர்புகள் ஆகியவற்றுக்கும் சிறப்பு ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

600 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்க்கு நிகரான ஹைட்ரோகார்பன் இருப்புகளைக் கண்டறிய இத்திட்டம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், 'இந்தியாவில் தயாரிப்போம்', 'தற்சார்பு இந்தியா' ஆகிய திட்டங்களின் கீழ் உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்தும். சர்வதேச அளவில் பெரும் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தொழில்வளர்ச்சி, புத்தாக்கம், நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்' என்று அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் இறக்குமதியையே பெருமளவில் நம்பியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் கச்சா எண்ணெய் இறக்குமதி 77 சதவீதத்தில் இருந்து 88 சதவீதமாக அதிகரித்துவிட்டது. இயற்கை எரிவாயு தேவையில் கிட்டத்தட்ட பாதியளவு இறக்குமதியை சார்ந்துள்ளது.

மேற்காசிய பிரச்னையால் சர்வதேச அளவில் எரிசக்தி விநியோகம் தடைபட்டதால், இந்தியாவிலும் அதன் தாக்கங்கள் எதிரொலித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

**மிதக்கும் சூரிய மின் உற்பத்தி திட்டங்களை ஊக்குவிக்க ரூ.5,070 கோடி:** நீர் நிலைகளின் மேற்பரப்பில் மின் சேமிப்பு கட்டமைப்புடன் கூடிய மிதக்கும் சூரிய மின் உற்பத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை ஊக்குவிக்க ரூ.5,070 கோடி மதிப்பீட்டிலான பிரதமரின் சூரிய சரோவர் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை வெள்ளிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

5,000 மெகாவாட் சூரிய மின் உற்பத்தியை நோக்கமாக கொண்ட இத்திட்டத்தின்கீழ், தகுதியுள்ள சூரிய மின் உற்பத்தி திட்டங்களுக்கு அவை வெற்றிகரமாக தொடங்கப்பட்ட பிறகு 1 மெகாவாட் மின் உற்பத்திக்கு ரூ.1 கோடி என்ற அளவில் மத்திய அரசின் நிதியுதவி வழங்கப்படும். 2031 வரை ஐந்தாண்டுகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

நாட்டில் மிதக்கும் சூரிய மின் உற்பத்தி திட்டங்களின் வாயிலான மின் உற்பத்தி திறன் தற்போது 700 மெகாவாட்டாக உள்ளது. இதை 5,000 மெகாவாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# எப்படி எதிர்கொள்வது?

இபிஎஃப்ஓ இணையதளம் முடங்கும்போது பயனாளிகள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பின்வரும் மாற்று முறைகளைப் பயன்படுத்தித் தங்கள் விவரங்களை அறியலாம் அல்லது புகார்களைப் பதிவு செய்யலாம்:

**மிஸ்டு கால் சேவை:** உங்களது யுஏஎன் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள கைப்பேசி எண்ணிலிருந்து 011-22901406 என்ற எண்ணுக்கு 'மிஸ்டு கால்' (எண்ணை அழைத்து இணைப்பைத் துண்டித்தல்) கொடுத்தால், சில நிமிஷங்களில் உங்களது பி.எஃப். இருப்புத் தொகை மற்றும் கடைசிப் பங்களிப்பு விவரங்கள் குறுஞ்செய்தியாக வரும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

**குறுஞ்செய்தி சேவை:** பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிலிருந்து ஆங்கிலத்தில் EPFOHO UAN TAM (தமிழில் விவரங்கள் பெற) என டைப் செய்து '7738299899' என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பியும் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

**உமாங் செயலி:** இணையதளம் முடங்கினாலும், மத்திய அரசின் "UMANG' கைப்பேசி செயலியைப் பதிவிறக்கம் செய்து, அதில் ஆங்கிலத்தில் "EPFO' பிரிவின் கீழ் உள்நுழைந்து கிளைம்கள் மற்றும் தற்போதைய நிலையைக் கண்காணிக்க முயற்சிக்கலாம்.

**குறைதீர் இணையதளம்:** இணையதள முடக்கம் மற்றும் ஓய்வூதியத் தாமதம் குறித்து epfigms.gov.in என்ற அதிகாரபூர்வ குறை தீர்க்கும் தளத்தில் நேரடியாகப் புகார் பதிவு செய்யலாம். இதில் அளிக்கப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

Academy
TNPSC Exams
Coimbatore - 641 001